செய்தி வெளியீடு எண்: 732 நாள்:29.10.2019

<u>செய்தி வெளியீடு</u>

**போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் அனைவரும் உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டுமென மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்**

காலமுறை அடிப்படையில் உறுதியளிக்கப்பட்ட உயர் ஊதிய உயர்வு (Dynamic Assured Career Progression - DACP) உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 5 நாட்களாக, **அரசு அங்கீகாரம் பெறாத** FOGDA அமைப்பைச் சேர்ந்த சில அரசு மருத்துவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த அமைப்பு அரசு அங்கீகாரம் பெறாத அமைப்பாக இருந்தபோதிலும், இக்கூட்டமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகளிடம் 25.10.2019 அன்று சுகாதாரத் துறை செயலாளர் மற்றும் பிற துறைத்தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என எடுத்துரைத்து, தற்போது மழைக்காலத்தில் பொது மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு, பொது மக்கள் நலன் கருதி, போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என கேட்டுக்கொண்ட பின்னரும், போராட்டத்தில் ஈடுபட்டதுடன், எந்தவிதமான முன் அறிவிப்பும் இன்றி திடீரென சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை வளாகத்தில் ஐந்து மருத்துவர்கள் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சூழ்நிலையில், அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை, எளிய நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் ஊதியம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை மேற்கூறிய கூட்டமைப்பு முன்வைத்துள்ளது. நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மருத்துவ சேவை வழங்குவதில் அரசு மருத்துவர்களின் பங்கினை இந்த அரசு என்றும் குறைத்து மதிப்பிட்டதில்லை. அதனால்தான், சிறப்பு சலுகையாக, தமிழக அரசில் பணிபுரியும் 10 இலட்சம் அரசு அலுவலர்களில், அரசு மருத்துவர்களுக்கு மட்டுமே 20 ஆண்டுகளில் உயர் ஊதியம் பெறுவதற்கான,

காலமுறை அடிப்படையில் உறுதியளிக்கப்பட்ட ஊதிய உயர்வு (Dynamic Assured Career Progression - DACP) அளிக்கப்பட்டு வருகிறது. **இதுபோன்ற சலுகை அரசில் பணிபுரியும் வேறு எந்த துறையினருக்கும் வழங்கப்படுவதில்லை.** மத்திய அரசில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியவும், சொந்தமாக மருத்துவமனைகள் வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படுவது இல்லை. எனவே தனியார் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படாத மத்திய அரசு மருத்துவர்களுக்கு காலமுறை அடிப்படையில் வழங்கப்படும் உயர் ஊதிய விகிதத்தை, தனியார் மருத்துவப் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படும் மாநில அரசு மருத்துவர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, மத்திய அரசு பணிக்கும் மாநில அரசு பணிகளுக்கும் பணி அமைப்பு அடிப்படையிலேயே வேறுபட்டுள்ள நிலையில் சம்பள விகிதத்தை மட்டும் ஒப்பிடுவது நியாயமற்றதாகும். எனினும், உயர் தகுதி அடிப்படையிலும், கடின பணிச் சூழல் உள்ள இடங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் சிறப்புப் படிகள் வழங்குவது குறித்து இந்த அரசு பரிசீலித்து வருகிறது.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள பணியிடங்களை MCI விதிமுறைகளின்படி அமைக்கக்கூடாது எனவும், நோயாளிகளின் தேவைக்கேற்பவும், மருத்துவர்களின் பணிச்சுமைக்கு ஏற்பவும் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்தவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, MCI விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் பணியிடங்கள் அமைக்கப்படவேண்டும். எனினும் இந்தப் பணியிடங்களுக்கு மேல், தேவைப்படும் இடங்களில் கூடுதலாக பணியிடங்கள் உருவாக்குவது தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது.

இதுதவிர, பட்ட மேற்படிப்பு படித்த மருத்துவர்களுக்கு கலந்தாய்வின் மூலமாக மட்டுமே பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்றும் வட்ட அரசு மருத்துவமனைகளின் தேவைக்கேற்ப காலிப் பணியிடங்களை முன்னுரிமை அடிப்படையில் நிரப்பி வரும் தற்போதைய நடைமுறை கிராமப்புறங்கள் மற்றும் சிறு நகரங்களில் வசிக்கும்

பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை மேம்படுத்த வழிவகுக்கிறது. எனவே, மக்களின் நலன் கருதி இந்த நடைமுறையை அரசு தொடர்ந்து கடைபிடிக்கும்.

பட்ட மேற்படிப்புச் சேர்க்கையில் 50 சதவிகிதத்தை அரசு மருத்துவர்களுக்கென ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதுவே இந்த அரசின் நிலைப்பாடாகவும் இருந்து வரும் போதிலும் MCI விதிமுறைகளின்படி, இந்த ஒதுக்கீட்டை பின்பற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையிலும், அரசு மருத்துவர்களின் நலனைக் கருதி, இந்த அரசு, அவர்களுக்கு 30 சதவிகிதம் வரை ஊக்க மதிப்பெண் வழங்கி வருகிறது. எனினும், 50 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற இந்த அரசின் நிலைப்பாட்டை மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

எனவே, நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு அவ்வப்போது பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வரும்நிலையில், மக்களின் உயிர்காக்கும் உயரிய பணியில் ஈடுபட்டு வரும் மருத்துவர்கள், இதுபோன்ற போராட்டங்களில் ஈடுபட்டு மக்கள் நலப் பணிகளுக்கு இடையூறாக இருப்பது வேதனையளிக்கிறது. எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மருத்துவத் துறைக்கு தமிழக அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. நமது நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் அரசு மருத்துவ கல்லூரிகள் தமிழகத்தில்தான் உள்ளன. மேலும் 6 புதிய மருத்துவக் கல்லூரிகளை திறப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசின் ஒப்புதல் பெற்று 900 மருத்துவ இடங்களை உருவாக்கியுள்ளது. 2018–19 ஆம் ஆண்டில் மட்டுமே 350 கூடுதல் மருத்துவ இடங்கள் இந்த அரசால் பெறப்பட்டுள்ளன. 2011 முதல் இதுவரை மொத்தம் 1305 கூடுதல் மருத்துவ இடங்களை அம்மா அவர்களின் அரசு பெற்றுள்ளது. இதனால் பல கிராமப்புற மாணவர்களின் மருத்துவராகும் கனவும் நனவாகியுள்ளது. ஒரு மருத்துவரை உருவாக்க சுமார் ரூ. 1.24 கோடியை அரசு செலவிடுகிறது. இது மக்களின் வரிப்பணத்தில்தான் செலவிடப்படுகிறது. தனியார் மருத்துவ கல்லூரியில் மருத்துவ படிப்பிற்காக சுமார் ரூ. 1.05 கோடி ரூபாயை செலவிட வேண்டும். ஆனால் அரசுக் கல்லூரிகளில் அவர்கள் ஆண்டிற்கு ரூ. 13,600/– வீதம் ஆக

மொத்தம் ரூ.68,000/– மட்டுமே செலவிட வேண்டும். இவ்வாறு மக்களுடைய வரிப்பணத்தில் மருத்துவத் துறையில் அரசு அதிக முதலீடுகள் செய்வதால் மட்டுமே தமிழகத்தில் அதிக அளவில் மருத்துவர்களை உருவாக்க முடிகின்றது.

**<u>தமிழ்நாட்டில் அரசு மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மொத்த மாத ஊதியம் பின்வருமாறு (சென்னையில், ஓய்வூதிய பங்களிப்பு உட்பட) :</u>**

| பணிக்காலம் | முதல் ஆண்டு ரூ. | 8வது ஆண்டு ரூ. | 15வது ஆண்டு ரூ. | 17வது ஆண்டு ரூ. | 20வது ஆண்டு ரூ. |
|---|---|---|---|---|---|
| **அரசு மருத்துவரின் மொத்த ஊதியம்** | **80,247** | **97,900** | **1,22,919** | **1,35,365** | **1,53,027** |

இதே மொத்த ஊதிய அளவில்தான் மற்ற மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவர்களுக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆந்திரா, தெலுங்கானா, கேரளா, கர்நாடகம் போன்ற நம்மை சுற்றியுள்ள தென்மாநிலங்களில் எங்கும் மத்திய அரசுக்கு இணையாக மாநில அரசு மருத்துவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. தமிழக அரசு மருத்துவர்கள், தனியார் மருத்துவப் பணி மேற்கொள்ள வாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழக அரசு மருத்துவர்கள் இதனை கருத்தில் கொண்டு மக்கள் நலனில் தங்களுடைய பொறுப்பினை உணர்ந்து செயல்பட வேண்டும்.

எனவே அரசு மருத்துவர்களின் நியாயமான கோரிக்கைள் அனைத்தையும் கனிவுடன் இந்த அரசு பரிசீலிக்கும் என்று உறுதியளித்த பின்பும், பொதுமக்களின் நலன் பாதிக்கப்படும் இத்தகைய போராட்டத்தை இந்த அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. எனவே நோயாளிகளின் நலன் கருதியும் அரசு மருத்துவமனைகளின் சேவைகள் பாதிக்கப்படாமல் இருக்கவும், அரசு மருத்துவர்கள் இப்போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். போராட்டம் தொடரும் சூழ்நிலையில், பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அம்மா அவர்களின்ன் அரசு உறுதியோடு மேற்கொள்ளும் எனவும் தெளிவுபடுத்தப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**